MALAR 4 | ITHAZH 5

# TGC TIMES

## Tamil Gospel Church Monthly Newsletter

For details about TGC Contact **Pastor. Joseph** 240 437 8545

**SUNDAY SERVICE**
**5.00 PM**
Worshipping at
**142B Sand Hills road,**
**Monmouth Jn NJ 08852**
**www.tamilgospelchurch.org**




## IN THIS ISSUE


Kids' Corner 2
Announcements 2
Birthdays/Anniversaries 3
Ministry Updates 4
Testimonies 5




**"பயப்படாதிருங்கள், சிலுவையில் அறையப்பட்ட நசரேயனாகிய இயேசுவைத் தேடுகிறீர்கள்; அவர் உயிர்த்தெழுந்தார், அவர் இங்கேயில்லை;" மாற்கு 16:6**

கர்த்தருடைய பரிசுத்த நாமத்துக்கு ஸ்தோத்திரம். அவருக்கே மகிமை உண்டாவதாக.

இந்த மே மதத்திலும் இந்த செய்தி மடல் மூலமாக உங்களோடு தொடர்பு கொள்ள செய்த தேவனை துதிக்கிறேன். பல விதமான சவால்களும், கலக்கங்களும் நிறைந்த இந்த நாட்களில் ஆண்டவர் நமக்கு தரக்கூடிய விசேஷித்த ஒரு நம்பிக்கையின் செய்தி; பயப்படாதிருங்கள் நம் தேவன் இயேசு உயிர்தெழுந்துவிட்டார். "கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து," (1 கொரி 15: 3.4).

இயேசுவின் வாழ்க்கையில் எதுவும் தற்செயலாக நடக்கவில்லை; அதுபோல் நம்முடைய வாழ்க்கையிலும் எதுவும் தற்செயலாக நடப்பதில்லை. அதை பரிசுத்த பவுல் தனது நிருபத்தில் ரோமர் 8:28 இல் குறிப்பிட்டுள்ளார். நம் வாழ்க்கையில் நடக்கும் எல்லா காரியங்களிலும் ஒரு பின்னணி உண்டு, உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக(யோ 14:1). உண்மையிலே அவரை தேடி வந்த மகதலேனா மரியாள், யாக்கோபின் தாயுமாகிய மரியாளும், சிலோமே என்பவளும், சிலுவையில் அறையப்பட்ட இயேசுவாகிய தேவனை, அவரது கல்லறையில் சுகந்தவர்க்கமிடும்படி தேடினாரகள் (மாற்கு 16:1). ஏற்கனவே வேதவாக்கியத்தில் அவரை குறித்து சொல்லப்பட்ட வார்த்தைகளை விசுவாசியாதபடினால் அப்படி செய்தார்கள்.

CONTINUED ON PAGE 6













## KIDS' CORNER - THE STORY OF ABRAHAM AND ISAAC




TO BE CONTINUED

# Happy Birthday

| | |
|---|---|
| Iniya Premkumar | 2-May |
| Emmanuel Jebaraj | 2-May |
| Shakinah Anand | 3-May |
| Ami(Priya) Aravin | 6-May |
| Suresh Gautham | 10-May |
| Shobana Giri Abraham | 10-May |
| Elliana Fredrick | 12-May |
| Elda Williams | 13-May |
| David Livingston | 14-May |
| Sasi | 14-May |
| Nirmal | 15-May |
| Anitha Joe | 16-May |
| Johnathan Paul | 17-May |
| Chelsia Angeline | 17-May |
| Christy Aarathana David | 18-May |
| Bilson | 18-May |
| Samypillai Jayaraj | 18-May |
| David Narayanan | 22-May |
| Joshua Raj | 23-May |
| Percy Senthil | 24-May |
| Sadhana Giftson | 26-May |
| Preetha David | 26-May |
| John Devakadatcham | 27-May |
| Stephen Kirubakaran | 28-May |
| Jasmine Shamine Andrew | 28-May |
| Daneshia Bilson | 28-May |
| Jansi Maduraiveeran | 28-May |
| Mohan Gopal | 29-May |
| Sharon Rose Samuel | 29-May |
| Ranjith Jayapandian | 30-May |
| Rebeccah Johnson | 31-May |

# HAPPY ANNIVERSARY

| | |
|---|---|
| Siva Kumar & Kavitha Sivakumar | 3-May |
| Dhinahar Raj & Bhuvana Dhinahar | 5-May |
| Giftson Samraj & Sadhana Giftson | 9-May |
| Christopher Newton & Shanthi Newton | 11-May |
| Immanuel Anand & Christilda Immanuel | 13-May |
| Jefferson & Anu Jefferson | 13-May |
| Rajasingh Fredrick & Jerrina Jayapaul | 14-May |
| Vijay Kumar & Sheela Christy | 16-May |
| Giritharan Abraham & Shobana Giri Abraham | 23-May |
| Praveen Kumar & Esther Devakadatcham | 23-May |
| Richy Gerard & Angel Richy | 23-May |
| Jebastine Vetharaj & Swarna Jebastine | 25-May |
| Vigesh Solomon & Jeyashree Vijesh | 26-May |
| Andrew Yesuraj & Shamine Andrew | 26-May |
| Krishnamoorthy & Jagatha Seenivasan Moorthy | 28-May |

# JUNIOR BIBLE QUIZ (JBQ)

2019 North East Regional - JBQ held at Mechanicsville Christian Center, Mechanicsville, NJ on the week of April 27th 2019.

Our church team **Knights 4 Christ – Faith** came in 2nd Place and selected for **2019 JBQ National Festival** which going to happen at **Victory Worship Center, Tucson, AZ on June 6, 7, 8, 2019**

All Glory to God. **A big kudos to the kids and congratulations to the coaches and parents**. Please keep these kids and the ministry in your prayers.

– Rajasingh







## ALL YOUR CHILDREN SHALL BE TAUGHT BY THE LORD, AND GREAT SHALL BE THE PEACE OF YOUR CHILDREN.

## TESTIMONIES

There were many ups and downs at my work for the past 4 months as my project was ending by April. God was with me in all the hurdles and helped me to get a new project in NJ which didn't require any major relocation. All Thanks and Praise be to Lord Jesus Christ. Amen.



**- Simon Anand**

During women's fellowship, I saw an aunty who is about 70 years old sharing her burden with one another fellow sister that her eyelid was bruising from the age of 17. Holy Spirit inspired me to ask her name and pray for her, but I hesitated to do so. After ending our prayers, I left and half way through home I realized my phone is missing. So, I drove back and waited for the fellow sister for church key, surprising the same Aunty came and gave her name voluntarily along with her phone number. Amazed 😊 God wants my prayer with her name😊



**- Anugraha Frank**

## DO YOU KNOW?




## JOIN US IN THE CHURCH CONFERENCE PRAYERS

| Sunday Preparatory Prayer | Men's Fellowship Prayer | Women's Fellowship Prayer | P&W Preparatory Prayer |
|---|---|---|---|
| Every Saturday | Every Wednesday | 1st of Every Month | Every Thursday |
| at 9:00 PM | at 9:30 PM | at 9:00 PM | at 9:30 PM |
| 641-715-3294 | 401-283-5650 | 641-715-328 | 641-715-3294 |
| 197264# | 56532# | 671733# | 197264# |

இதைக்குறித்து இயேசுவே சீஷர்களிடம் பேசியிருந்தார். அனைவரும் அறிந்திருந்தார்கள் (லூக்கா 24:26,27). வேதனையான சூழ்நிலை, கலக்கமான நேரம், இனி அவர்களது வாழ்க்கையில் நம்பிக்கை இழந்த சூழ்நிலை. இந்த நேரத்தில் தான் கல்லறையை தேடிவந்த அவர்களுக்கு சொல்லப்பட்ட நம்பிக்கையின் செய்தி "அவர் உயிர்த்தெழுந்தார், அவர் இங்கு இல்லை" (மாற்கு 6:6). இயேசுவை குறித்து நாம் என்ன நினைக்கிறோம்? நாம் என்ன யோசிக்கிறோம்? இவர் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்ட சர்வத்திற்கும்மேலான தேவன். ரோமர் 9:5 மேலும் அவரை குறித்து, இவரே மெய்யான தேவனும், நித்திய ஜீவனுமாயிருக்கிறார்(1 யோவான் 5:20) மேலும் அவர் மரணத்தினால் கட்டப்பட்டிருக்க கூடாதிருந்தது (அப் 2:24) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

கிறிஸ்து இனி மரிப்பதில்லை. மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை (ரோமர் 6:9) அவர் பாடுபட்டபின்பு நாற்பது நாளளவும் அப்போஸ்தலருக்கு தரிசனமாகி, தேவனுடைய ராஜ்யத்துக்குரிய காரியங்களை அவர்களோட பேசி, அவர்களுக்கு தம்மை உயிரோடிருக்கிறவராக காண்பித்தார் (அப் 1:3). (பின்னும் அவர்) பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார். (மாற்கு 16:19) மேலும் இயேசுவே சொன்ன வார்த்தை " மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்".

அவருடைய மகிமையான உயிர்தெழுதலின் மூலமாய் நமக்கு கொடுக்கப்பட்ட நம்பிக்கை:

1. **ரட்சிப்பு:**

அதாவது பாவம், மரணம், பிசாசு இவைகளின் மத்தியில் எக்காலத்துக்கும் நமக்கு ஒரு மீட்பு, பதுகாப்பு உண்டு. இதை தான் பரிசுத்த பவுல், “கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள்” (1 கொரி 15:17). மேலும், “இவரோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறபடியினாலே, மாறிப்போகாத ஆசாரியத்துவமுள்ளவராயிருக்கிறார்:” “அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார். (எபி 7:24,25). இது நமக்கு எவ்வளவு பெரிய பாதுகாப்பு என்று சற்று சிந்தித்து பாருங்கள்.. இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. (ரோமர் 8:37)

2. **எதிர்காலத்தை குறித்த நம்பிக்கை:**

அப்படியே நீங்களும், உங்களை பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய **கர்த்தராகிய** இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள். (ரோமர் 6:11). கிறிஸ்துவுடனேகூட நாம் மரித்தோமானால், அவருடனேகூட பிழைத்தும் இருப்போம் என்று நம்புகிறோம் (ரோமர் 6:8). இந்த வார்த்தை, இயேசு மரிப்பதற்கு முன்பே சொன்ன வார்த்தை: நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள் (யோவான் 14:19). We have hope for this world and that world, that is in heaven. மார்த்தாள், மரியாள், அவர்கள் சகோதரனாகிய லாசரு மரணத்துக்கேதுவான வியாதிப்பட்டிருந்தபோது, இயேசுவிடம் சொல்லி அனுப்பினார்கள். இயேசுவோ, உடனே வரவில்லை. என்ன நடந்தது? லாசரு மரித்துப்போனான். மரித்து நான்கு நாட்களானது, இயேசு வந்தார், மார்த்தாள் இயேசுவினிடத்தில் வந்து: ஆண்டவரே, நீர் இங்கேயிருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான் (யோ11:21). இயேசு அவளை நோக்கி: உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான் என்றார். மேலும், அவர் சொன்ன வார்த்தை: "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்" (யோ 11:25). பிற்பாடு இயேசு லாசருவை உயிரோடே எழுப்பினர். நம்முடைய நம்பிக்கை எத்தனை மேலான நம்பிக்கை, இம்மைக்காகமாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம் (1 கொரி 15:19).

3. **இயேசு உயிரோட எழுந்தபடியால் இந்த உலகத்திலும், நம் மரணத்திற்கு பிற்பாடும் இயேசு நம்மோடு இருக்கிறார்.**

உயிரோடு எழுந்த இயேசு சீஷர்களுக்கு கொடுத்த உறுதியான வார்த்தை, நம்பிக்கை என்னவென்றால்: உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன். இதை சொன்ன நம் ஆண்டவர் இயேசு அவர்களுடனே கிரியைகளை நடப்பித்து அவர்களால் அடையாளங்களினால் வசனத்தை உறுதிப்படுத்தினார்.

4. **இயேசு உயிரோடே எழுப்பப்பட்டது போல நாமும் அவருக்குள் உயிரோட எழுந்துயிருப்போம்.**

இதைதான் கர்த்தருடைய வார்த்தை கூறுகிறது: “மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்” (1 கொரி 15:21,22). இது நம் வாழ்க்கையில் பெற்றுக்கொள்ளக்கூடிய மகிமையான தெய்வீக அனுபவம். இதைதான் மரித்தோர் எப்படி எழுந்திருப்பார்கள்? எப்படிபட்ட சரீரத்தோட வருவார்கள்? என்று ஒருவன் சொல்வானாகில்: “அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும்; கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும்(1கொரி15:42,43). இயேசு உயிரோடு எழுப்பப்பட்டது போல நாமும் அவருக்குள் மறித்து உயிரோடே எழுப்பப்படுவோம். மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும். இது எத்தனை பெரிய நம்பிக்கை! ஜீவனுள்ள நம்பிக்கை!!. கர்த்தர் உங்களோடு இருப்பராக. ஆமென்

- Pastor KSS Joseph